செ.வெ.எண்: 461 நாள்: 24.07.2019

**புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தமிழக அரசின் வளர்ச்சித் திட்டப் பணிகளை அனைத்துத்துறை அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும்.**

**மாவட்ட கண்காணிப்பு அலுவலர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அரசு செயலர் திரு.ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., அவர்கள் அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அரசு செயலர் திரு.ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (24.07.2019) நடைபெற்றது. கஜா புயல் மறுசீரமைப்பு மற்றும் மறுகுடியமர்த்துதல் கூடுதல் திட்ட அலுவலர் திரு.ராஜகோபால்சுங்கரா, இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அரசுச் செயலர் அவர்கள் பேசியதாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து இன்றையதினம் அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தை பொருத்தவரை கஜா புயலின் போது மிகச்சிறப்பாக அனைத்துத்துறை அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றியது பாராட்டுக்குரியது. மாவட்டத்தில் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் வழங்கி சிறப்பான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் மாவட்ட நிர்வாகத்தின் செயல்பாடு பாராட்டுக்குரியது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குடிநீர் திட்டப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து பணியாற்ற அறிவுறுத்தி உள்ளார்கள். அந்த வகையில் மாவட்டத்தின் ஊரக வளர்ச்சித்துறை மற்றும் பேரூராட்சி அலுவலர்கள் பொதுமக்களுக்கு குடிநீர் தேவைப்படும் இடங்களில் கூடுதல் ஆழ்துளை கிணறுகள் அமைத்தல், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் அமைத்து குடிநீர் வழங்கவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தடையின்றி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதை தொடர்ந்து உறுதிப்படுத்த வேண்டும்.

கஜா புயலின் போது புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏற்பட்ட பாதிப்புகளில் இருந்து பொதுமக்களை விரைவாக மீட்டெடுக்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் சிறப்பாக செயல்பட்டார்கள். இதன் தொடர்ச்சியாக புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவித்தொகை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், புயலால் வீடுகளை இழந்தவர்களுக்கு புதிய வீடுகள் கட்டிக்கொடுத்தல் மற்றும் மறுசீரமைப்பு பணிகளை விரைவாக மேற்கொள்ளும் வகையில் கஜா புயல் மறுசீரமைப்பு மற்றும் மறுகுடியமர்த்துதல் கூடுதல் திட்ட அலுவலர் திரு.ராஜகோபால்சுங்கரா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஒவ்வொரு வாரமும் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

மேலும் பிரதமமந்திரி கிசான் சம்மான் நிதித்திட்டமான விவசாயிகளுக்கு ரூ.6,000 வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தும் வகையில் பட்டா மாறுதல் செய்வதற்கு சிறப்பு முகாம்கள் ஏற்பாடு செய்து விவசாயிகள் பயன்பெறும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கண்மாய், ஏரி, குளங்கள் தூர்வாரி, கரைகளை பலப்படுத்தி நீர் பிடிப்பு திறனை அதிகரிக்க செய்வதுடன், நிலத்தடி நீர் மட்டத்தை மேம்படுத்துவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட சிறப்பு திட்டமாகிய குடிமராமத்து பணியினை புதுக்கோட்டை மாவட்டத்தில் பாசனதாரர் சங்கங்களின் மூலம்

மேற்கொள்ளவும், இப்பணிகள் உரிய முறையில் நடைபெறுவதை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.

இதேபோன்று வேளாண்மைத்துறை, பொதுப்பணித்துறை, வனத்துறை, சமூகநலத்துறை, ஆதிதிராவிடர்நலத்துறை உள்ளிட்ட அனைத்து துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழக அரசின் திட்டப் பணிகளை அரசு அலுவலர்கள் ஒருங்கிணைந்து சிறந்த முறையில் பணியாற்ற வேண்டும். இவ்வாறு மாவட்ட கண்காணிப்பு அலுவலர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அரசு செயலர் திரு.ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தி, மாவட்ட வன அலுவலர் ஆனந்தகுமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மாலதி, வேளாண் இணை இயக்குநர் சுப்பையா உள்ளிட்ட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**